பத்திரிகைகள்பற்றிய தீர்ப்பு வேறு விதமாக இருக்கிறது. வெளி நாட்டுப் பத்திரிகைகள் அல்லது வெளிநாட்டிலிருந்து வெளியிட்ட புத்தகங்களிலிருந்து எந்த உறுப்பினராவது ஏதாவது வாசிக்க விரும்பினால் அந்தப் பத்திரிகையை அல்லது அந்த புத்தகத்தை பேரவைத் தலைவரிடம் முன்கூட்டி காண்பித்து அனுமதி பெற்றாக வேண்டும். இதுதான் தீர்ப்பு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த அலுவல் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஃபினான்ஷியல் சப்ளிமெண்டரி எஸ்டிமேட்ஸ். . .

THIRU K. VINAYAKAM : Another point of order.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அந்த பாயின்ட் ஆஃப் ஆர்டர் பற்றிய விவாதம் முடிந்து விட்டது.

(இ) பேரவை நடவடிக்கைகளில் ' வினா நேரம் ' இல்லாமை.

THIRU K. VINAYAKAM : I wish to raise a point of order on another subject. Question time is the most lively hour in the Assembly and it is a prerogative which has been enjoyed by the Members of the House.

THIRU RAMA. ARANGANNAL : A point of order on this point of order.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எப்பொழுதும் எழுப்பலாம்.

THIRU K. VINAYAKAM : The Hon. Speaker announced that there were no questions for to-day. May I know whether the Members have not submitted any questions to be answered or the Ministry is not prepared to answer them or the officers have not brought them to the notice of the Ministers? It is not as if the Members are at fault. The Ministers are at fault.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . . .

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அதற்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை என்னுடையது. உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதை நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் 34-வது விதியை அவர்கள் படித்துப் பார்த்தால் கேள்வி அனுப்பிய பிறகு 19 நாட்கள் ஆகும் அதற்குப் பதில் சொல்வதற்கு என்று இருக்கிறது. ஆகவே 19 நாட்கள் ஆன பிறகுதான் மதிப்பிற்குரிய அங்கத்தினர் கால தாமதமாகிவிட்டது என்று கூற முடியும். நான்கு நாட்கள் செயலாளரிடமும் 15 நாட்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிடமும் இருக்கலாம். ஆகவே 19 நாட்களுக்குப் பிறகுதான் பதில் கொடுக்க முடியும் என்றிருப்பதால் உறுப்பினர்களுக்கு ஏதாவது அவசரமான கேள்வி இருக்கும் என்றால் குறுகிய கால நோட்டீஸில் கேள்வி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்த அலுவலை தொடர்ந்து நடத்தலாம்.

THIRU K. VINAYAKAM : On a point of personal explanation.